www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi10T

**தென்காசி மாவட்டம்**

**முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023**

08-08-2023

**வகுப்பு 10**

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 8×1=8**

1) ''காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'' - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

3) திருச்சி அருகே அல்லூரில் 'திருவள்ளுவர் தவச்சாலை' அமைத்தவர்; பாவாணர் நூலகம் உருவாக்கியவர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) இளங்குமரனார்

இ) தமிழழகனார் ஈ) பாரதியார்

4) ''பாடு இமிழ் பனிக்கடல் பருகி'' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) ''சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி'' என்னும் அடியில் ''பாக்கம்'' என்பது

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

6) '<u>பெரிய மீசை</u>' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**பாடலைப் படித்து விடை தருக:**

''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல''

7) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) இளங்கோவடிகள் ஈ) நல்வேட்டனர்

8) 'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள்

அ) சிறிய உலகம் ஆ) அகன்ற உலகம்

இ) சுற்றும் உலகம் ஈ) நனைந்த உலகம்

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக: (16 கட்டாய வினா) 6×2=12**

9) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

10) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு உயிர் மரம்' - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

11) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

12) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

13) ''இறடிப் பொம்மல் பெறுகுவீர்'' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



14) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

15) **கலைச்சொல் தருக:**

அ) Conversation ஆ) Tornado

16) 'தரும்' என முடியும் குறளை எழுதுக.

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக:**

'அன்னை மொழியே' எனத் தொடங்கும் பாடல்

**(அல்லது)**

'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் பாடல்

18) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

19) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

20) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

21) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

22) ''கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு''

- இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **2×5=10**

23) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**உ) விரிவான விடையளிக்க:** **1×8=8**

25) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

----------

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com